**சுருக்கம்**

பள்ளிக் கல்வி - 2021 - 2022ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை - மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - சான்றிதழ்கள் மின்னணு சேவைகள் (e-Services) வாயிலாக பெறுதல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித்[பக5(2)]துறை.**

**அரசாணை (நிலை) எண். 4**

நாள்: 21.01.2022
(திருவள்ளுவராண்டு 2053,
பிலவ வருடம், தை 8 )

படிக்கப்பட்டது:

பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.030754/ எம்/இ1/2021, நாள் 10.11.2021.

**ஆணை:-**

2021-2022 ஆம் ஆண்டு பள்ளிக் கல்வித்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களால் ஏனையவற்றுடன் வரிசை எண்.18-ல் "மின்னணு சேவைகள்" என்ற தலைப்பில் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது :-

"பள்ளிக் கல்வித் துறையில் பொது மக்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றுகளான நன்னடத்தைச் சான்று, ஆளறிசான்று, தமிழ் வழியில் படித்ததற்கான சான்று உள்ளிட்ட அனைத்துச் சான்றுகளும் அவர்தம் இல்லத்திற்கு அருகில் உள்ள அரசு பொது சேவை மையங்களின் வாயிலாக விண்ணப்பித்து காலவிரயமின்றிப் பெற்றுக் கொள்ளும் திட்டம் செயல்படுத்தப்படும்."

2. மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக பள்ளிக் கல்வி ஆணையர், மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வித் துறையில் உள்ள பல்வேறு இயக்ககங்களின் வாயிலாக இரண்டாம்படி மாற்றுச் சான்றிதழ், மதிப்பெண் பட்டியல் நகல், புலப்பெயர்வு சான்றிதழ் (Migration Certificate), கல்வி இணைச் சான்றிதழ் (Equivalence Certificate), தமிழ் வழியில் கல்வி

பயின்றமைக்கான சான்றிதழ் போன்ற பல்வேறு வகையானச் சான்றிதழ்களை, தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த பல்வேறு அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்கள் வாயிலாக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெற்று வருகின்றனர் என்றும், இச்சேவைகள் சிறப்பான முறையில் அளிக்கப்பட்டு வந்தாலும், மாணவர்கள், பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கே நேரில் சென்று பெற்றுவரும் நிலை இருந்து வருகிறது என்றும் இதனால் சம்பந்தப்பட்ட நபருக்கு காலவிரையம் மற்றும் பணவிரையம் ஏற்படுவதுடன், அரசு அலுவலகங்களுக்கும் பணிச்சுமை கூடி வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

3. மேலும், பள்ளிக் கல்வித்துறையின் பல்வேறு இயக்ககங்களின் வாயிலாக பின்வரும் சேவைகள் மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் அளிக்கப்பட்டு வருகின்றது என பள்ளிக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார் :-

| வ. எண் | பொருள் | அலுவலகம் |
|---|---|---|
| 1. | 1 முதல் 12-ஆம் வகுப்பிற்கான கல்வி இணைச் சான்று (பிற மாநிலங்கள் மற்றும் நாடுகளில் பயின்றமைக்கான கல்வி இணைச் சான்றிதழ் . (Equivalence Certificate). (Other States and Countries). | பள்ளிக் கல்வி ஆணையரகம் |
| 2. | தேசிய திறந்தவெளிப் பள்ளிகள் (NIOS) பிற மாநிலங்களில் 10, 12-ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு கல்வி இணைச் சான்று (Equivalence Certificate). | சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர். |
| 3 | பிற மாநிலத்தில் 10, 12-ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு கல்வி இணைச் சான்று (Equivalence Certificate). | சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர். |
| 4. | திறந்தவெளிப் பள்ளியில் படித்ததற்கான State Institute of Open School (SIOS) 10-ஆம் வகுப்பு முடித்தமைக்கான உண்மைத் தன்மைச் சான்று 1983-1984 முதல் 2001-2002. (Genuiness of Open Schools in 10th Std.). | மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் |

| | | |
|---|---|---|
| 5. | உண்மைத் தன்மைச் சான்றிதழ் (Genuiness Certificate) 8, 10, 11, 12 & D.El.Ed., (Diploma in Elementary Education) (தொடக்கக் கல்வி ஆசிரியர் பட்டயத் தேர்வு) வகுப்புகளுக்கு | சார்ந்த மாவட்ட அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் |
| 6. | தமிழ் வழியில் பயின்றமைக்கான சான்று (PSTM-Persons Studied in Tamil Medium). (பள்ளியில் நேரடியாக பயின்ற மாணவர்களுக்கு). | சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர் |
| 7. | தமிழ் வழியில் பயின்றமைக்கான சான்று (PSTM Persons Studied in Tamil Medium). (தனித் தேர்வர்களுக்கு). | அரசுத் தேர்வுகள் இயக்ககம் |
| 8. | D.El.Ed., (Diploma in Elementary Education), (தொடக்கக் கல்வி ஆசிரியர் பட்டயத் தேர்வு) தமிழ் வழியில் பயின்றமைக்கான சான்று. (PSTM Persons Studied in Tamil Medium). | மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (DIET) |
| 9. | இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் - 8, 10, 11, 12 & D.El.Ed., (Diploma in Elementary Education), (தொடக்கக் கல்வி ஆசிரியர் பட்டயத் தேர்வு) | அரசுத் தேர்வுகள் இயக்ககம் |
| 10. | தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் Certified Copy of Mark List (CCM) - 8, 10, 11, 12 & D.El.Ed., (Diploma in Elementary Education), (தொடக்கக் கல்வி ஆசிரியர் பட்டயத் தேர்வு) | அரசுத் தேர்வுகள் இயக்ககம் |
| 11. | மதிப்பெண் சான்றிதழில் திருத்தம் - 8, 10, 11, 12 & D.El.Ed., (Diploma in Elementary Education), (தொடக்கக் கல்வி ஆசிரியர் பட்டயத் தேர்வு) | அரசுத் தேர்வுகள் இயக்ககம் |
| 12. | 10 & 12-ஆம் வகுப்பிற்கான புலப்பெயர்வு சான்றிதழ் (Migration Certificate). | அரசுத் தேர்வுகள் இயக்ககம் |
| 13. | பிற வகுப்புகளுக்கான புலப்பெயர்வு சான்றிதழ் (Migration Certificate). | சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் |
| 14. | மதிப்பீட்டுச் சான்றிதழ் (Evaluation Certificate).- D.El.Ed., (Diploma in Elementary Education), Other States. (மற்ற மாநிலங்களில் வழங்கப்படும் தொடக்கக் கல்வி ஆசிரியர் பட்டயத் தேர்வு). | மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் |

| | | |
|---|---|---|
| 15. | பள்ளி மாற்றுச் சான்றிதழ் (இரண்டாம் படி). | சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர் |
| 16. | பள்ளி மாற்றுச் சான்றிதழில் திருத்தம் மேற்கொள்ளுதல் | பள்ளிக் கல்வி ஆணையரகம் |
| 17. | D.El.Ed., (Diploma in Elementary Education), (தொடக்கக் கல்வி ஆசிரியர் பட்டயத் தேர்வு) இரண்டாம்படி மாற்றுச் சான்றிதழ். | மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (DIET) |
| 18. | இரண்டாம்படி ஆசிரியர் தகுதி தேர்வுச் சான்று (Issuance of Duplicate Certificate for TET Paper -I & II). | ஆசிரியர் தேர்வு வாரியம் |
| 19. | தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பு (2 ஆண்டுகள்) ஆசிரியராகக் கூடிய மாணவர்களுக்கு பணி முன் பயிற்சி வழங்குதல் மற்றும் மாற்றுச் சான்றிதழ் வழங்குதல். [Who have completed Diploma in Elementary Education (2 years)] (To Provide Pre - Service Training to Prospective Students - To Obtain Transfer Certificate). | மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (DIET) |
| 20. | உடற்கல்வியில் பட்டயப் படிப்பு - சுயநிதி நிறுவனங்களின் (2 ஆண்டுகள்) ஆசிரியராகக் கூடிய மாணவ ஆசிரியர்களுக்கு பணி முன் பயிற்சி வழங்குதல் மற்றும் மாற்றுச் சான்றிதழ் வழங்குதல். [Who have completed Diploma in Physical Education in Self-Finance Institutes (2 years)] - (To Provide Pre -Service Training to Prospective Students -To Obtain Transfer Certificate). | மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (DIET) |
| 21. | விளையாட்டு முன்னுரிமைச் சான்று (Sports Quota Certificate). | முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் (CIPE) |
| 22. | தனித் தேர்வர்கள் தேர்வுக்கு விண்ணப்பித்தல் (Private candidates apply for exam) | தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் செயல்படும் சேவை மையங்கள் |
| 23. | நன்னடத்தைச் சான்று. (Conduct Certificate) | சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர் |

4. தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (Tamil Nadu e-Governance Agency) செயல்படுத்திவரும் மின் மாவட்ட (e-District Project) திட்டத்தின் ஒரு பகுதியாக அரசு கேபிள் டி.வி நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் நடத்திவரும் அரசு இ-சேவை மையங்களின் வாயிலாக மேற்கூறிய சேவைகளை கிடைக்கச் செய்யலாம் என்றும், வருங்காலத்தில் கண்டறியப்படும் சேவைகளையும் இது போன்றே செயல்படுத்தலாம் என்றும் பள்ளிக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. எனவே, மேலே பத்தி 3-இல் குறிப்பிடப்பட்டுள்ள 23 விதமான சான்றுகள் அனைத்தும் பொது மக்கள் மற்றும் மாணவர்கள், அவர்தம் இல்லத்திற்கு அருகிலுள்ள அரசு E-சேவை மையங்களின் வாயிலாக விண்ணப்பித்து காலவிரயமின்றி பெற்றுக் கொள்ளவும், மேலும் வருங்காலங்களில் புதியதாக கண்டறியப்படும் சேவைகளையும் மின் மாவட்ட (e-District Project) திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (Tamil Nadu e-Governance Agency) வாயிலாக இணைய வழி சேவையாக மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் வழங்க ஏதுவாக உரிய அரசாணை வழங்குமாறு பள்ளிக் கல்வி ஆணையர் அரசைக் கோரியுள்ளார் .

6. பள்ளிக் கல்வி ஆணையரின கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் மேலே பத்தி 3-இல் குறிப்பிடப்பட்டுள்ள 23 விதமான சான்றுகள் அனைத்தும் அவர்தம் இல்லத்திற்கு அருகிலுள்ள அரசு E-சேவை மையங்களின் வாயிலாக விண்ணப்பித்து காலவிரயமின்றி பெற்றுக் கொள்ளவும், மேலும் வருங்காலங்களில் புதியதாக கண்டறியப்படும் சேவைகளையும் மின் மாவட்ட (e-District Project) திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (Tamil Nadu e-Governance Agency) வாயிலாக இணைய வழி சேவையாக மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திட அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.

அனைத்து துறை தலைவர்கள், பள்ளிக் கல்வித் துறை, சென்னை-6.

நகல்:

அரசு முதன்மைச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை,
சென்னை-9.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை-9.

பள்ளிக் கல்வி (வ.செ.)த் துறை, சென்னை-9.

அரசு முதன்மைச் செயலாளர், தகவல் தொழில்நுட்பத் துறை, சென்னை-9.

இயக்குநர் / முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, 2வது மற்றும் 7வது தளம்,
பி.டி.லீ செங்கல்வராய நாயக்கர் கட்டடம், அண்ணாசாலை,
சென்னை - 600 002.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

21/01/22

பிரிவு அலுவலர்.

21/01/2022